பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.02.2025 முதல் 05.02.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.comதொ. நகல்(அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 009 (01) PJN/GKMS/2025 தேதி: 31.02.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (26.01.2025 முதல் 30.01.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -05.02.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26/01 | 27/01 | 28/01 | 29/01 | 30/01 | | நாள்-1 01/02 | நாள்-2 02/02 | நாள்-3 03/02 | நாள்-4 04/02 | நாள்-5 05/02 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 12 | 10 | 8 | 10 | 10 |
| 33 | 33 | 33 | 30 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 29 | 29 | 29 | 29 | 29 |
| 21 | 21 | 21 | 21 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 24 | 24 | 24 | 26 | 26 |
| 4 | 4 | 4 | 4 | 4 | மேக மூட்டம் | 6 | 6 | 6 | 5 | 5 |
| 62-91 | 78-91 | 77-98 | 85-94 | 81-91 | ஈரப்பதம் (%) | 71-79 | 71-79 | 71-79 | 76-83 | 76-83 |
| 3 | 3 | 3 | 2 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 10 | 12 | 12 | 12 |
| வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (01.02.2025 முதல் 05.02.2025 வரை):**

பிப்ரவரி 01 முதல் 05 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பநிலை 24-29 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 71-83 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

பிப்ரவரி 05 லிருந்து 11 வரை மழை (0.8 **மி.மீ**) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (31 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (21 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பச்சைப் பயிறு | விதைத்தல் | நெல் தரிசு பயிறு வகையான ADT 3 யை ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் பிப்ரவரி இரண்டாம் வாரம் வரை விதைக்கலாம். நெற்பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் போது ஏழு நாட்களுக்கு முன்னரே விதைகளை விதைக்கவும். |
| நெல் |  இலை சுருட்டு புழு | நெற் பயிரில், இலை சுருட்டு புழுவைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு அசார்டியாக்ட்டின் (*azadirachtin* 0.03% (300 ppm) 2000 மி.லி அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (*cartaphydrochloride* 50% SP) 1000 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| |  புகையான் | நெற் பயிரில் புகையானைக் கட்டுப்படுத்த பைமெட்ரோசின் (*pymetrozine* 50 WG) 300 கிராம் அல்லது தையமீத்தாக்சம் (*Thiamethoxam* 25 % WG) 100 கிராம் பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| | <br>**குலை நோய்**<br><br>**இலைப்புள்ளி நோய்**<br><br>**நெற்பழம் நோய்**<br><br>**நெல்மணி நிறமாற்ற நோய்** | கடந்த சில வாரங்களில் நிலவிய வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் போன்ற வானிலை சூழ்நிலையானது நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தோன்றுவதற்கு சாதகமாக உள்ளது. ஆகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெற்பயிரின் நோய்களைக் கட்டுப்படுத்த *சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ்* அல்லது *பேசில்லஸ் சப்டிலிஸ்* என்ற எதிர் உயிரியை 0.5 % (ஒரு லிட்டர் நீரில் 5 மிலி/ கிராம்) என்ற அளவில் 10 நாட்கள் இடைவெளியில் நடவு நட்ட 45 வது நாள் முதல் மூன்று முறை தெளிக்கவும்.<br>தற்பொழுது தண்டு உருளும் பருவத்தில் உள்ள நெற்பயிர்களில் ஒரு லிட்டர் நீரில் 2 மி.லி பிக்காக்சிஸ்ட்ரோபின் + ப்ரோபிகோனசால் (Picoxystrobin 7.05% + Propiconazole 11.7% SC) அல்லது 2 மி.லி ட்ரைசைக்ளோசோல் மற்றும் அசாக்ஸிஸ்ட்ரோபின் (Tricyclazole 20.4 % + Azoxystrobin 6.8 SC %) அல்லது 2 கிராம் கார்பென்டாசிம் + மேங்கோசெப் (Carbendazim 12 % + Mancozeb 63 % WP) அல்லது 1 மி.லி அசாக்ஸிஸ்ட்ரோபின் + டைபெனோகோணசோல் (18.2 % + Difenoconazole 11.4 % SC) மருந்து கலந்த கரைசலை ஏதாவது ஒன்றினை உடனடியாக தெளிக்க வேண்டும். மேலும் இந்த மருந்து கலைவகளில் ஏதாவது ஒன்றினை 50 சத பூக்கள் வெளிவந்தவுடன் மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். |
| ஆடு | அம்மை நோய் | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே ஆடு வளர்ப்போர் தங்கள் ஆடுகளுக்கு அம்மை நோய் வரமால் தடுக்க வெயில் காலத்திற்கு முன்பாகவே அம்மை தடுப்பூசி போட வேண்டும். |

**குறுஞ்செய்தி:** நெல் தரிசு பயிறை பிப்ரவரி இரண்டாம் வாரம் வரை விதைக்கலாம்.

**முதல்வர்**